## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.33/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 7 |
| Name | : திரு. பாண்டியன் |
| Father/Husband's Name | : வெங்கடேசன் |
| Village | : நெ.11/54, பிடபள்யூ 1 வது தெரு |
| Taluk | : மாமல்லபுரம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.01.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது மாமல்லபுரத்தில் வசித்து சிலை வடிக்கும் தொழில் செய்து வருகிறேன். 30.07.2022 அன்று பகல் சுமார் 12.00 மணியளவில் செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்தில் TN 1658 என்ற பூதூர் செல்லும் பேருந்து எனது அம்மாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. எனது அம்மா குமாரவாடியிலிருந்து மாமல்லபுரம் வருவதற்கு செங்கல்பட்டு பேருந்து நிலையத்தில் இறங்கி நின்று கொண்டிருந்த போது ஓட்டுநரின் அஜாக்கிரதையால் பேருந்தின் பின்பக்கம் மோதி விபத்து நடந்தது. எனது அம்மாவை 108 ஆம்புலன்ஸ் மூலமாக செங்கல்பட்டு அரசு மருததுவமனையில் அனுமதித்தார்கள். அங்கிருந்து அவர் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. நானும், எனது அண்ணன் கெஜாவும் செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

இறந்த எனது அம்மாவிற்கு 77 வயதிருக்கும் என்றால் இல்லை 66 வயது தான்

இருக்கும். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் செங்கல்பட்டு பேருந்து நிலையத்தில் அதிக பேருந்துகள் இருக்கும் இடம் என்றால் சரிதான். செங்கல்பட்டு பேருந்து நிலையத்தில் கூட்ட நெரிச்சல் அதிகமாக இருக்கும் என்றால் பேருந்து நிலையம் என்பதால் கூட்டம் அதிகமாக தான் இருக்கும் கூட்டம் அதிகமாக இருந்தாலும் ஓட்டுநர் அஜாக்கிரதையாக இருந்ததாக பொது மக்கள் கூறினார்கள். போலிஸ் விசாரணையில் நான் ஓட்டுநர் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டினார் என்று பொது மக்கள் கூறினார்கள் என்ற விவரத்தை கூறினேனா என்றால் கூறினேன். நான் போலிசாரிடம் அவ்வாறு எதுவும் கூறவில்லை தற்போது வழக்கை வலுப்படுத்தவதற்காக தற்போது முதன் முறையாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பேருந்து நிலையத்தில் போலிஸ் பூத் உள்ளது என்றால் சரிதான். பேருந்து நிலையத்தை சுற்றி நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக நானும் ஒரு புகார் அளித்தேன் என்றால் இல்லை நானும் ஒரு கையெழுதது போட்டேன் அதை சாட்சிக்காக போட்டேன். நான் எனது தாயாரின் இறப்பிற்கு நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. இறந்த நபர் எப்படி, எங்கு, எப்போது என்பது யாருக்குமே தெரியாது என்றாலும், தற்போது மோட்டார் வாகன இழப்பீடு கோருவதற்காக தவறுதலான சங்கதிகளை முதல் விசாரணையில் நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.